TAMIL NADU POLLUTION CONTROL BOARD

**Annexure I – Introduction to Manjappai Award**

**INTRODUCTION**:

The Government of Tamil Nadu, in exercise of the powers conferred under Section 5 of the Environment (Protection) Act, 1986, notified ban on manufacture, store, supply, transport, sale or distribute of use and throwaway plastics, plastic sheets used for food wrapping, spreading on dining table etc., plastic plates, plastic coated tea cups and plastic tumbler, water pouches and packets, plastic straw, plastic carry bag and plastic flags irrespective of thickness vide G.O.(Ms) No.84, Environment & Forests Department dated 25.06.2018. The said ban is in effect from 01.01.2019.

In coordination with line departments, the Board has taken action for effective implementation of the ban on plastic, which includes awareness programs through regional conferences, district environmental committee meetings, rallies at district headquarters, messages through social media, and display board in national highway toll gates etc.

One of the flagship initiatives towards implementing the ban on Single Use Plastics in the state is the 'Meendum Manjappai campaign'. This people's campaign against throw away plastics focuses on improving awareness among people about the impacts of single use plastics and to persuade people to shift to eco-friendly alternatives to plastic. The "Meendum Manjappai campaign" was inaugurated by Hon'ble Chief Minister of Tamil Nadu on 23.12.2021 in a mega event held at the Kalaivanar Arangam, Chepauk, Chennai when the "Manjappai" logo for the campaign launched. The Hon'ble Chief Minister also inaugurated a National Expo displaying various eco-friendly alternatives along with the machinery for the production of eco-friendly alternatives such as banana leaf products, fibre/rice bran/rice husk / agricultural products, areca leaves products, edible cutlery products, coconut shell products, coir products, pottery products, palm products, cloth/jute products, compostable carry bags/cutlery products, cloth banners, including a stall demonstrating activities undertaken under Extended Producer Responsibility initiatives in the State (EPR). An awareness short film on the ill effects of single use plastic was screened and an appeal was also made to the public to use traditional cloth bags (Manjappai) and avoid single use plastics.

In order to take forward the "Meendum Manjappai" campaign, the Hon'ble Minister for Environment has made an Announcement on the floor of Assembly regarding the Manjappai Awards which will be presented to the best 3 schools, 3 colleges and 3 commercial Establishments for effective implementation of the ban on single-use plastic (SUPs) in their campus and encouraging the use of alternatives to single-use plastic (SUP) carry bags and other banned SUPs by reviving the use of traditional eco-friendly alternatives, such as the Manjappai (yellow cloth bag).

**VISION:**

To encourage and create Institutions and organisations in Tamil Nadu spearhead the 'Meendum Manjappai campaign'. To increase the awareness levels amongst the people of Tamil Nadu on the ban and ill effects of plastic and to develop a clean and safe environment for the present as well as future generations.

**OBJECTIVES:**

The objective of the awards is to encourage and motivate the Educational Institutions and Commercial Establishments to promote the use of alternatives to plastics wherever possible and undertake awareness generation activities within and outside their premises to ensure community involvement in taking forward the campaign.

**ABOUT MANJAPPAI AWARD:**

TNPCB intends to present Manjappai awards to the Educational Institutions (Schools & Colleges) and Commercial Establishments who proactively participate and make exemplary contribution towards the Meendum Manjappai campaign' through internal initiatives and external awareness programs. The award will be presented to 3 best Schools, 3 best Colleges and 3 best Commercial Establishments which effectively implement the ban on SUPs in their campus. The first prize will carry a sum of Rs. 10 lakhs, second prize will be Rs. 5 lakhs and Rs. 3 lakhs will be issued as third prize. The criteria for evolving the best Plastic free school/college/commercial Establishments are given in Annexure.

**Number of awards**: 3 each for Schools/ Colleges/ Commercial Establishments

**Eligibility Criteria and other conditions:**

1. **Participants:**
    - i. Schools (**High Schools/ Higher Secondary Schools)**
    - ii. Colleges (**Universities/** Arts and Science Colleges /Engineering Colleges/**Medical Colleges/ Law Colleges/** Polytechnic Colleges/ Management studies Institutions)
    - iii. Commercial Establishments (Malls/ Shopping complexes/ **Shops/ Hotels/ Restaurants**)
2. **Schools, Colleges, Commercial Establishments who have already received Manjappai Awards 2023 and 2024 are not eligible to apply. Applications received from those awardees will summarily be rejected.**
3. **Applications and other supporting documents shall be sent in hard copy and scanned soft copy (in CDs/ Pen drives) to the address prescribed in**

the advertisement and soft copy (PDF and Word files) alone in the mail prescribed in the advertisement.

4. Responses to the award criteria must have necessary supporting documents (photos/ videos/ banners/ posters/ pamphlets/ brochures/ circulars/ magazines/ articles/ newspaper cuttings, etc., with date and time of the event). Applications without necessary supporting documents will not be considered for evaluation.

**Focus areas for Meendum Manjappai awards**:

1. Education and Training on ill effects of plastic and alternatives
2. Awareness on 'Meendum Manjappai campaign'.
3. Environmental Protection
4. Control and Recycling of Plastic Waste

**Mode of Selection**

1. The Application format in Annexure-I to be filled up and submitted with necessary enclosures to the District Collectors by 01/05/2025.
2. In order to select the best schools, colleges and commercial Establishments in the District, District Level committees consisting of following members will be constituted to select the best schools, colleges and commercial Establishments of 3 numbers each at District level.

| S.No | Members of the committee | Role |
|---|---|---|
| 1 | District Collector | Chairperson of the Committee |
| 2 | Regional Director, Municipal Administration | Member |
| 3 | Assistant Director, Town Panchayat | Member |
| 4 | CEO/DEO, School Education | Member |
| 5 | District Environmental Engineer | Member - Convener |

3. The District Level Committee will receive the documentations from schools, colleges and commercial Establishments each within their jurisdiction and inspect them and finalise 3 best schools, colleges and commercial Establishments within their jurisdiction and furnish the list with documentations received to the Chairman TNPCB.
4. From the selected list of applications/ documentations received from the District Level Committees, a State level committee will select the three best schools, colleges and commercial Establishments in the State.

5. The award will be issued as cash prize of Rs. 10 lakhs each for first best school, college and commercial Establishment in the State, Rs. 5 lakhs each for the second best school, college and commercial Establishment in the State, and Rs. 3 lakhs each for the third best school, college and commercial Establishment in the State. The prize money with awards will be distributed to the winners during the World Environment Day 2025 function.

**Date of Submission to District Collector**

Last date of submitting proposal for Manjappai Award 2025 to the District Collector is 01/ 05/ 2025.

**Sd/-xxxxx**
**Chairperson**

**For Chairperson**

## இணைப்பு I - மஞ்சப்பை விருது அறிமுகம்

### அறிமுகம்

தமிழ்நாடு அரசு, 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின் பிரிவு 5 இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, ஒருமுறை மட்டும் பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக்குகள், உணவுப் பொட்டலத்திற்குப் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் தாள்கள், சாப்பாட்டு மேசையில் விரிக்கப்படும் பிளாஸ்டிக் தாள்கள் , பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் பூசப்பட்ட தேநீர் கோப்பைகள் மற்றும் பிளாஸ்டிக் டம்ளர், தண்ணீர் பாக்கெட்டுகள், பிளாஸ்டிக் உறிஞ்சுகுழல்கள், பிளாஸ்டிக் கைபைகள் மற்றும் பிளாஸ்டிக் கொடிகள் ஆகியவற்றின் தடிமன் எதுவாக இருந்தாலும், உற்பத்தி, சேமிப்பு, போக்குவரத்து, விற்பனை அல்லது விநியோகம் ஆகியவற்றை தடை செய்வதாக 25.06.2018 தேதியிட்ட சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையின் அரசாணை எண்.84 இல் அறிவிக்கப்பட்டது. இந்தத் தடை 01.01.2019 முதல் அமலில் உள்ளது.

துறைகளுடன் ஒருங்கிணைந்து, பிளாஸ்டிக் தடையை திறம்பட செயல்படுத்த வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதில் பிராந்திய மாநாடுகள், மாவட்ட சுற்றுச்சூழல் குழு கூட்டங்கள், மாவட்ட தலைமையகங்களில் நடத்தப்பட்ட பேரணிகள், சமூக ஊடகங்கள் மூலம் செய்திகள் மற்றும் தேசிய நெடுஞ்சாலை சுங்கச்சாவடிகளில் காட்சிப் பலகை வைக்கப்படுவது போன்ற விழிப்புணர்வு திட்டங்கள் அடங்கும்.

மாநிலத்தில் ஒற்றை பயன்பாட்டு பிளாஸ்டிக் தடையை அமல்படுத்துவதற்கான முதன்மையான முயற்சிகளில் ஒன்று 'மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரம்' ஆகும். தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக்குகளுக்கு எதிரான இந்த மக்கள் பிரச்சாரம், ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கின் தாக்கங்கள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை மேம்படுத்துவதையும், பிளாஸ்டிக்கிற்கு மாற்றான சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களுக்கு மாறுவதற்கு மக்களை தூண்டுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. "மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரம்", சென்னை சேப்பாக்கம் கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற மிகப்பிரம்மாண்டமான நிகழ்வில், 23.12.2021 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது, பிரச்சாரத்திற்கான "மஞ்சப்பை" சின்னம் வெளியிடப்பட்டது.

மேலும் வாழை இலை பொருட்கள், நார்/நெல் உமி/விவசாய பொருட்கள், பாக்கு இலை பொருட்கள், உண்ணக்கூடிய உணவு பரிமாறும் பொருட்கள், தேங்காய் ஓடு பொருட்கள், தென்னை நார் பொருட்கள், மட்பாண்ட பொருட்கள், பனை பொருட்கள், துணி/சணல் பொருட்கள், மக்கும் கை பைகள்/ உணவு பரிமாறும் பொருட்கள், துணி பதாகைகள் போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுகளை உற்பத்தி செய்வதற்கான இயந்திரங்களுடன் கூடிய பல்வேறு சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுகளை காட்சிப்படுத்தும் தேசிய கண்காட்சியையும் மாண்புமிகு முதலமைச்சர் தொடங்கி வைத்தார். மாநிலத்தில் விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பின் (EPR) கீழ் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளை விளக்கும் ஒரு அரங்கமும் இதில் அடங்கும். ஒற்றை பயன்பாட்டு பிளாஸ்டிக்கின் தீமைகள் குறித்த விழிப்புணர்வு குறும்படம் திரையிடப்பட்டது, மேலும் பாரம்பரிய துணிப் பைகளை (மஞ்சப்பை) பயன்படுத்தவும், ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்கைத் தவிர்க்கவும் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

"மீண்டும் மஞ்சப்பை" பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்லும் வகையில், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சட்டமன்றத்தில் மஞ்சப்பை விருதுகள் குறித்து ஒரு அறிவிப்பை வெளியிட்டார். அதில், இந்த விருதுகள், தங்கள் வளாகத்தில் ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக் தடையை திறம்பட செயல்படுத்தியதற்காகவும், மஞ்சப்பை போன்ற பாரம்பரிய சுற்றுச்சூழக்கு உகந்த மாற்றுகளின் பயன்பாட்டை மீண்டும் உயிர்ப்பிப்பதன் மூலம் ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக் (SUP) கை பைகள் மற்றும் பிற தடைசெய்யப்பட்ட SUP களுக்கு மாற்றாகப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்காகவும் சிறந்த 3 பள்ளிகள், 3 கல்லூரிகள் மற்றும் 3 வணிக நிறுவனங்களுக்கு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

**நோக்கக் கூற்று:**

தமிழ்நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்களை ஊக்குவித்து 'மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரத்தை' முன்னெடுக்க வைப்பது. பிளாஸ்டிக் தடை மற்றும் அதன் தீமைகள் குறித்து தமிழக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு சுத்தமான மற்றும் பாதுகாப்பான சுற்றுச்சூழலை உருவாக்குதல்.

**நோக்கங்கள்:**

இந்த விருதுகளின் நோக்கம், கல்வி நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் பிளாஸ்டிக்கிற்கு மாற்றான பொருட்களின் பயன்பாட்டை இயன்றவரை செயல்படுத்த ஊக்குவிப்பதும், பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்வதில் சமூக ஈடுபாட்டை உறுதி செய்வதற்காக தங்கள் வளாகத்திற்கு

உள்ளேயும் வெளியேயும் விழிப்புணர்வு உருவாக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதும் ஆகும்.

**மஞ்சப்பை விருது:**

வளாகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் விழிப்புணர்வு திட்டங்கள் மூலம் 'மீண்டும் மஞ்சப்பை' பிரச்சாரத்தில் முன்முயற்சியுடன் பங்கேற்று முன்மாதிரியான பங்களிப்பைச் செய்யும் கல்வி நிறுவனங்கள் (பள்ளிகள் மற்றும் கல்லூரிகள்) மற்றும் வணிக நிறுவனங்களுக்கு மஞ்சப்பை விருதுகளை வழங்க தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் திட்டமிட்டுள்ளது. தங்கள் வளாகத்தில் ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்குகள் மீதான தடையை திறம்பட செயல்படுத்தும் 3 சிறந்த பள்ளிகள், 3 சிறந்த கல்லூரிகள் மற்றும் 3 சிறந்த வணிக நிறுவனங்களுக்கு இந்த விருது வழங்கப்படும். முதல் பரிசாக ரூ. 10 லட்சம், இரண்டாம் பரிசாக ரூ. 5 லட்சம் மற்றும் மூன்றாம் பரிசாக ரூ. 3 லட்சம் வழங்கப்படும். சிறந்த பிளாஸ்டிக் இல்லாத பள்ளி/கல்லூரி/வணிக நிறுவனங்களை மதிப்பிடுவதற்கான அளவுகோல்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

விருதுகளின் எண்ணிக்கை: பள்ளிகள்/ கல்லூரிகள்/ வணிக நிறுவனங்களுக்கு தலா 3

**தகுதி அளவுகோல்கள் மற்றும் பிற நிபந்தனைகள்:**

1) பங்கேற்பாளர்கள்:
   i. பள்ளிகள் (உயர்நிலைப் பள்ளிகள்/ மேல்நிலைப் பள்ளிகள்)
   ii. கல்லூரிகள் (பல்கலைக்கழகங்கள்/ கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்/ பொறியியல் கல்லூரிகள்/ மருத்துவக் கல்லூரிகள்/ சட்டக் கல்லூரிகள்/ பாலிடெக்னிக் கல்லூரிகள்/ மேலாண்மை படிப்பு நிறுவனங்கள்)
   iii. வணிக நிறுவனங்கள் (வணிக நிறுவனங்கள்/ வணிக வளாகங்கள்/ கடைகள்/ உணவு விடுதிகள்/ உணவகங்கள்)
2. ஏற்கனவே 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளுக்கான மஞ்சப்பை விருதுகளைப் பெற்ற பள்ளிகள், கல்லூரிகள், வணிக நிறுவனங்கள் விண்ணப்பிக்கத் தகுதியற்றவை. ஏற்கனவே இவ்விருது பெற்றவர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஆரம்பகட்டத்திலேயே நிராகரிக்கப்படும்.
3. விண்ணப்பங்கள் மற்றும் பிற துணை ஆவணங்கள் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கடின நகல் மற்றும் ஸ்கேன் செய்யப்பட்ட விவரங்கள் குறுந்தகடு (CD) கள்/ குறும்பதிவி (பென் டிரைவ்)-களில் அனுப்பப்பட வேண்டும். விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அஞ்சல் முகவரிக்கு மென் பிரதி (PDF மற்றும் MS Word கோப்பு) மட்டும் அனுப்பப்பட வேண்டும்.

4. விருதுக்கான அளவுகோல்களுக்கான பதில்களுக்கு தேவையான துணை ஆவணங்கள் (புகைப்படங்கள்/ காணொளிகள்/ பதாகைகள்/ சுவரொட்டிகள்/ துண்டுப்பிரசுரங்கள்/ பிரசுரங்கள்/ சுற்றறிக்கைகள்/ பத்திரிகைகள்/ கட்டுரைகள்/ செய்தித்தாள் துண்டுகள் போன்றவை, நிகழ்வின் தேதி மற்றும் நேரத்துடன்) இருக்க வேண்டும். தேவையான துணை ஆவணங்கள் இல்லாத விண்ணப்பங்கள் மதிப்பீட்டிற்கு பரிசீலிக்கப்படாது.

**மீண்டும் மஞ்சப்பை விருதுகளுக்கான கவனம் செலுத்தும் பகுதிகள்:**

1. பிளாஸ்டிக்கின் தீமைகள் மற்றும் மாற்று வழிகள் குறித்த கல்வி மற்றும் பயிற்சி.

2. 'மீண்டும் மஞ்சப்பை பிரச்சாரம்' குறித்த விழிப்புணர்வு.

3. சுற்றுச்சூழல் பாதுகாப்பு

4. பிளாஸ்டிக் கழிவுகளை கட்டுப்படுத்துதல் மற்றும் மறுசுழற்சி செய்தல்.

**தேர்வு முறை:**

1. இணைப்பு-I இல் உள்ள விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து தேவையான இணைப்புகளுடன் 01/05/2025 க்குள் மாவட்ட ஆட்சியர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

2. மாவட்டத்தில் சிறந்த பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் வணிக நிறுவனங்களைத் தேர்ந்தெடுக்க, மாவட்ட அளவில் தலா 3 சிறந்த பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் வணிக நிறுவனங்களைத் தேர்ந்தெடுக்க பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்:

| வ. எண் | குழுவின் உறுப்பினர்கள் | பொறுப்பு |
|---|---|---|
| 1) | மாவட்ட ஆட்சியர் | குழுவின் தலைவர் |
| 2) | மண்டல இயக்குநர், நகராட்சி நிர்வாகம் | உறுப்பினர் |
| 3) | உதவி இயக்குநர், பேரூராட்சி | உறுப்பினர் |
| 4) | தலைமை கல்வி அலுவலர்/மாவட்ட கல்வி அலுவலர், பள்ளிக் கல்வித்துறை | உறுப்பினர் |
| 5) | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் | உறுப்பினர் – குழு கூட்டுநர் |

3. மாவட்ட அளவிலான குழு, தங்கள் அதிகார வரம்பிற்குள் உள்ள பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் வணிக நிறுவனங்களிடமிருந்து ஆவணங்களைப் பெற்று, அவற்றை ஆய்வு செய்து, 3 சிறந்த பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் வணிக

நிறுவனங்களை இறுதி செய்து, பெறப்பட்ட ஆவணங்களுடன், இறுதிப் பட்டியலை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத் தலைவருக்கு வழங்கும்.

4. மாவட்ட அளவிலான குழுக்களிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள்/ஆவணங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியலிலிருந்து, மாநில அளவிலான குழு மூலம் மாநிலத்தில் உள்ள மூன்று சிறந்த பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் வணிக நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்படும்.

5. இந்த விருது, மாநிலத்தில் முதல் சிறந்த பள்ளி, கல்லூரி மற்றும் வணிக நிறுவனத்திற்கு தலா ரூ. 10 லட்சம் ரொக்கப் பரிசாகவும், மாநிலத்தில் இரண்டாவது சிறந்த பள்ளி, கல்லூரி மற்றும் வணிக நிறுவனத்திற்கு தலா ரூ. 5 லட்சம் ரொக்கப் பரிசாகவும், மாநிலத்தில் மூன்றாவது சிறந்த பள்ளி, கல்லூரி மற்றும் வணிக நிறுவனத்திற்கு தலா ரூ. 3 லட்சம் ரொக்கப் பரிசாகவும் வழங்கப்படும். விருதுகளுடன் கூடிய பரிசுத் தொகை 2025ம் ஆண்டு உலக சுற்றுச்சூழல் தின விழாவில் வெற்றியாளர்களுக்கு வழங்கப்படும்.

**மாவட்ட ஆட்சியரிடம் சமர்ப்பிக்கும் தேதி**

2025 ஆம் ஆண்டுக்கான மஞ்சப்பை விருதுக்கான விண்ணப்பங்களை மாவட்ட ஆட்சியரிடம் சமர்ப்பிக்க கடைசி தேதி 01/05/2025 ஆகும்.

ஒம்/-
தலைவர்

தலைவருக்காக
03/4/25

**<u>Annexure-II / இணைப்பு – II</u>**

## Application for Manjappai Award

2025ஆம் ஆண்டு மஞ்சப்பை விருதிற்கான விண்ணப்பம்

**<u>Format to be filled up Schools / Colleges / Commercial Establishments:</u>**

<u>பள்ளிகள்/கல்லூரிகள்/வணிக நிறுவனங்கள் பூர்த்தி செய்ய வேண்டிய படிவம்:</u>

Type of Institution – Schools (*Assessment period - April 2024- March 2025*)

நிறுவனத்தின் வகை – பள்ளிகள் (*மதிப்பீட்டுக் காலம் ஏப்ரல் 2024 – மார்ச் 2025*)

| **FORM- I (SCHOOLS)/ படிவம் – I (பள்ளிகள்)** | | |
|---|---|---|
| **S.No. வ. எண்.** | **Questions கேள்விகள்** | **Answer பதில்** |
| ***GENERAL DETAILS: பொதுவிவரங்கள்:*** | | |
| 1 | Name of the Institution<br>கல்வி நிறுவனத்தின் பெயர் | |
| 2 | Type of Institution (**High Schools/ Higher Secondary Schools**)<br>கல்வி நிறுவனத்தின் வகை (உயர்நிலைப் பள்ளி/ மேல்நிலைப் பள்ளி) | |
| 3 | Address of the Institution<br>கல்வி நிறுவனத்தின் முகவரி | |
| 4 | Name of the Person to be contacted<br>தொடர்பு கொள்ள வேண்டிய நபரின் பெயர் | 5. Contact number<br>தொலைபேசி எண் |
| | | |
| 6 | Year of Establishment<br>துவங்கப்பட்ட வருடம் | 7. Strength of Institution<br>கல்வி நிறுவனத்தில் உள்ள மொத்த நபர்களின் எண்ணிக்கை |
| | | Students<br>மாணவர்கள் |
| | | Teachers<br>ஆசிரியர்கள் |
| ***RESPONSES TO AWARD CRITERIA விருது அளவுகோல்களுக்கான பதில்கள்*** | | |

| | | |
|---|---|---|
| 8 | Please give the number of student-led campaigns undertaken by the school for the prevention of SUPs outside the school premises<br>பள்ளி வளாகத்திற்கு வெளியே ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்கைத் தடுப்பதற்காக பள்ளி மாணவர்கள் மேற்கொண்ட பிரச்சாரங்களின் எண்ணிக்கை | |
| 9 | Please give the number of student-led campaigns undertaken by the school for the prevention of SUPs within the school premises<br>பள்ளி வளாகத்திற்குள் ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்கைத் தடுப்பதற்காக பள்ளி மாணவர்கள் மேற்கொண்ட பிரச்சாரங்களின் எண்ணிக்கை | |
| 10 | Do you celebrate Environment day, Earth day or any other days related to Environment on the campus? If yes, are there anything specific to plastics highlighted in the event?<br>பள்ளி வளாகத்தில், சுற்றுச்சூழல் தினம், புவி நாள் அல்லது சுற்றுச்சூழல் தொடர்புடைய வேறு ஏதேனும் தினங்கள் கொண்டாடப்படுகின்றதா?<br>ஆம் எனில், பிளாஸ்டிக்கை முன்னிலைப்படுத்தும் நிகழ்வுகள் ஏதேனும் உள்ளனவா? | |
| 11 | Please give the number of competitions conducted on ill effects of plastic / alternatives to plastic / eradication of SUPs *(Essay / Drawing / Oratory / Handicrafts, etc.,)*<br>பிளாஸ்டிக்கின் தீய விளைவுகள்/ பிளாஸ்டிக்கிற்கு மாற்றுப் பொருட்கள்/ ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்கை ஒழித்தல்/ (கட்டுரை/ ஓவியம்/ சொற்பொழிவு/ கைவினைப் பொருட்கள் தயாரித்தல் குறித்து நடத்தப்பட்ட போட்டிகளின் விவரங்களைக் குறிப்பிடுக) | |
| 12 | Please list the initiatives undertaken by the school management to prevent the use of plastic within school premises in day-to-day activities *(of school management and students) (for e.g., stationery items, files, students/teachers lunch packaging, notebook wrappers, decorations)*<br>பள்ளி வளாகத்திற்குள் பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட தினசரி நடவடிக்கைகளின் விவரங்களைக் குறிப்பிடு (எ.கா.: எழுதுபொருட்கள், கோப்புகள், மாணவர்கள்/ ஆசிரியர்களின் மதிய உணவுப் பொட்டலங்கள், புத்தகங்களுக்குப் போடப்படும் அட்டைகள், அலங்காரப் பொருட்கள்) | |
| 13 | Please give the number of awards won by the management for their plastic/ waste management practices/ initiatives.(During the year 2023 and 2024) | |

| | | |
|---|---|---|
| | பிளாஸ்டிக்/ கழிவு மேலாண்மை நடைமுறைகள்/ முன்முயற்சிகளுக்காக கடந்த இரு ஆண்டுகளில் நிர்வாகம் வென்ற விருதுகளின் எண்ணிக்கை (2023 மற்றும் 2024 ஆம் ஆண்டில்) மற்றும் விவரங்கள் | |
| 14 | Is there awareness on installation/ availability/ usage of bottle crushers/ Manjappai vending machines in Tamil Nadu?<br>தமிழ்நாட்டில் நிறுவப்பட்டுள்ள பிளாஸ்டிக் பாட்டில் சேகரிக்கும் (நொறுக்கும்) இயந்திரங்கள்/ மஞ்சப்பை விற்பனை இயந்திரங்கள் அமைந்துள்ள விவரங்கள்/ அவற்றின் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு உள்ளதா? எனில், அது குறித்த விவரங்கள் | |
| 15 | Please give the number of cleaning up activities conducted within campus/ in public spaces in the last 1 year (April 2024 to March 2025) and quantity of plastic collected/ disposed in such activities.<br>கடந்த 1 வருடத்தில் (ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 வரை) வளாகத்திற்குள்/ பொதுஇடங்களில் நடத்தப்பட்ட தூய்மைப் பணிகளின் எண்ணிக்கையையும், அத்தகைய நடவடிக்கைகளில் சேகரிக்கப்பட்ட/ அப்புறப்படுத்தப்பட்ட பிளாஸ்டிக்கின் அளவையும் வழங்கவும். | |
| 16 | Are there any specific waste segregation practices followed on the campus with focus on plastic *(Please specify the period when these were started)*<br>வளாகத்தில் பிளாஸ்டிக்கை மையமாகக் கொண்டு கழிவுகளைத் தரம் பிரிக்கும் நடைமுறைகள் ஏதேனும் பின்பற்றப்படுகிறதா? (எனில், இவை தொடங்கப்பட்ட காலத்தைக் குறிப்பிடவும்) | |
| 17 | Please give the proportion of plastic waste generated in the total waste on daily basis *(weight of plastic waste generated in a month/ weight of total waste generated in a month)*<br>தினசரி அடிப்படையில் மொத்தக் கழிவுகளில் உற்பத்தியாகும் பிளாஸ்டிக் கழிவுகளின் விகிதத்தை வழங்கவும் ((i) ஒரு மாதத்தில் உருவாகும் பிளாஸ்டிக் கழிவுகளின் எடை (ii) ஒரு மாதத்தில் உருவாகும் மொத்தக் கழிவுகளின் எடை) | |
| 18 | What initiatives were taken to replace plastic products used in the premises with eco-friendly alternatives? *(Give the number of items that are in plastic and number of items in alternatives)*<br>வளாகத்தில் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்த என்ன முயற்சிகள் எடுக்கப்பட்டன (பிளாஸ்டிக் மற்றும் | |

| | | |
|---|---|---|
| | மாற்றுப் பொருட்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடவும்) | |
| 19 | Please give the number of display boards / billboards put up regarding the banned SUPs/ Eco alternatives/ ill effects of Plastics.<br>தடை செய்யப்பட்ட ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்குகள்/சுற்றுச்சூழல் மாற்றுகள்/ பிளாஸ்டிக்கினால் ஏற்படும் தீய விளைவுகள் குறித்து வைக்கப்பட்டுள்ள காட்சிப் பலகைகள்/விளம்பரப் பலகைகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடவும். (விவரங்களுடன்) | |
| 20 | Are there any methods adopted by the school to dispose sanitary waste? – *any specific machinery used for the same* (If applicable)<br>பள்ளியில், சுகாதாரக் கழிவுகளை (Sanitary Waste) அப்புறப்படுத்த ஏதேனும் முறைகள் நடைமுறையில் உள்ளனவா – எனில், அதற்குப் பயன்படுத்தப்படும் குறிப்பிட்ட இயந்திரங்கள் (பொருந்தினால்) | |
| 21 | Is there a nodal officer/ faculty led team for waste management/ plastic management on the campus and what trainings are provided to the nodal officer in this regard?<br>வளாகத்தில் கழிவு மேலாண்மை/ பிளாஸ்டிக் மேலாண்மைக்கு நியமிக்கப்பட்ட அலுவலர்/ ஆசிரியர் தலைமையிலான குழு உள்ளதா மற்றும் இது தொடர்பாக நியமிக்கப்பட்ட அலுவலருக்கு என்ன பயிற்சிகள் வழங்கப்படுகின்றன? | |
| *The Institutions shall submit documentary evidence with dated photographs to back up their responses. The application form along with the evidence (documents/ photos/ videos) shall be emailed to the following email ID xxx@xxx.xxx with the subject 'Application for Manjappai Awards-Schools'. The evidences to be numbered based on the questions for which the same are provided. In case of multiple evidences, the evidences shall be assigned multilevel numbering, for e.g. 1.a, 1.b etc.*<br>*கல்வி நிறுவனங்கள் தங்கள் பதில்களுக்கான ஆவணச் சான்றுகளை, தேதியிட்ட புகைப்படங்களுடன் சமர்ப்பிக்கவேண்டும். விண்ணப்பப் படிவம், ஆதாரங்களுடன் (ஆவணங்கள்/ புகைப்படங்கள்/ வீடியோக்கள்) xxx@xxx.xxx என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 'மஞ்சப்பை விருதுகளுக்கான விண்ணப்பம்– பள்ளிகள்'என்ற தலைப்பில் அனுப்பப்பட வேண்டும். எந்தெந்த கேள்விகளுக்கானது என்ற அடிப்படையில் சான்றுகள் எண்ணிடப்பட வேண்டும். பல சான்றுகள்இருந்தால், சான்றுகளுக்குப் பலநிலை எண்கள் ஒதுக்கப்பட வேண்டும், எ.கா. 1.a, 1.b* | | |

Type of Institution - Colleges (*Assessment Period - April 2024- March 2025)*

நிறுவனத்தின் வகை – கல்லூரிகள் (*மதிப்பீட்டுக் காலம் ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 வரை*)

| FORM- II (COLLEGES)/ படிவம் – II (கல்லூரிகள்) | | |
|---|---|---|
| **S.No. வ. எண்.** | **Questions கேள்விகள்** | **Answer பதில்** |
| ***GENERAL DETAILS*** *பொது விவரங்கள்:* | | |
| 1. | Name of the Institution<br>கல்வி நிறுவனத்தின் பெயர் | |
| 2. | Type of Institution (Universities/ Arts and Science Colleges /Engineering Colleges/Medical Colleges/ Law Colleges/ Polytechnic Colleges/ Management studies Institutions)<br>கல்வி நிறுவனத்தின் வகை (பல்கலைக்கழகங்கள்/ கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள்/ பொறியியல் கல்லூரிகள்/ மருத்துவக் கல்லூரிகள்/சட்டக் கல்லூரிகள்/ பாலிடெக்னிக் கல்லூரிகள்/ மேலாண்மைக் கல்வி நிறுவனங்கள்) | |
| 3. | Address of the Institution<br>கல்வி நிறுவனத்தின் முகவரி | |
| 4. | Name of the Person to be contacted<br>தொடர்பு கொள்ள வேண்டிய நபரின் பெயர் | 5. Contact number<br>தொலைபேசி எண் |
| | | |
| 6. | Year of Establishment<br>துவங்கப்பட்ட வருடம் | 7. Total strength of the Institution<br>கல்வி நிறுவனத்தில் உள்ள மொத்த நபர்களின் எண்ணிக்கை |
| | | Students<br>மாணவர்கள் |
| | | Faculty<br>பேராசிரியர்கள் |
| ***RESPONSES TO AWARD CRITERIA*** *விருது அளவுகோல்களுக்கான பதில்கள்* | | |
| 8. | Please give the number of students who have participated in state/ national/ international level events on prevention on plastic usage or promotion of eco-friendly materials or similar themes *(e.g. seminars / paper presentations / publications / Olympiads etc.).*<br>பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தடுப்பது அல்லது சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களை ஊக்குவிப்பது அல்லது அதுபோன்ற செயல்கள்/ திட்டங்கள் (எ.கா. கருத்தரங்குகள் / விரிவுரைகள் / வெளியீடுகள் / ஒலிம்பியாட்கள் போன்றவை) குறித்த மாநில/ தேசிய/ | |

| | | |
|---|---|---|
| | சர்வதேச அளவிலான நிகழ்வுகளில் பங்கேற்ற மாணவர்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடவும். | |
| 9. | Please give the number of student - led campaigns undertaken by the college for creating awareness on plastic ban and its importance, outside the college premises.<br>பிளாஸ்டிக் தடை மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கல்லூரி வளாகத்திற்கு வெளியே மாணவர்களின் தலைமையில் எத்தனை பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன என்பதைத் தெரிவிக்கவும். | |
| 10. | Please give the number of student - led campaigns undertaken by the college for creating awareness on plastic ban and its importance, inside the college premises.<br>பிளாஸ்டிக் தடை மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக கல்லூரி வளாகத்திற்குள் மாணவர்களின் தலைமையில் எத்தனை பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன என்பதைத் தெரிவிக்கவும் | |
| 11. | Please give the number of display boards / billboards put up regarding the banned SUPs<br>தடை செய்யப்பட்ட ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்குகள் தொடர்பாக வைக்கப்பட்டுள்ள காட்சிப் பலகைகள் / விளம்பரப் பலகைகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடவும் | |
| 12. | Have you circulated any Institution wide notice asking the students and professors to avoid plastic items used in daily activities and shift to alternatives? If such initiatives were taken, please give examples of how effective it was and how much of plastic consumption was eliminated due to the same*(for e.g. stationery, files, food packaging, folders, decorations)*<br>மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் அன்றாட நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களைத் தவிர்த்து, சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்களுக்கு மாறுவதற்காக, ஏதேனும் ஒரு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதா? அத்தகைய முன்முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தால், அது எவ்வளவு பயனுள்ளதாக இருந்தது மற்றும் அதன் காரணமாக எவ்வளவு பிளாஸ்டிக் நுகர்வு (consumption) நீக்கப்பட்டது என்பதற்கான உதாரணங்களைத் தரவும் (எ.கா. எழுதுபொருட்கள், கோப்புகள், உணவுப் பொட்டலங்கள், கோப்புறைகள், அலங்காரப் பொருட்கள்) | |
| 13. | Please give the number of awards won by the management for their plastic/ waste management practices/ initiatives.<br>(During the year 2023 and 2024).<br>பிளாஸ்டிக்/கழிவு மேலாண்மை நடைமுறைகள்/ முன்முயற்சிகளுக்காக கடந்த இரு ஆண்டுகளில் நிர்வாகம் | |

| | | |
|---|---|---|
| | வென்ற விருதுகளின் எண்ணிக்கையை வழங்கவும். (2023 மற்றும் 2024 ஆம் ஆண்டில்) மற்றும் விவரங்கள். | |
| 14. | Had you adopted plastic waste management/ SUP reduction themes for any of the Environment day, Earth day or any other days related to Environment celebrations celebrated in the last 3 years? What were the specific activities/events conducted in this regard?<br>கடந்த 3 ஆண்டுகளில் சுற்றுச்சூழல் தினம், புவி நாள் அல்லது சுற்றுச்சூழல் தொடர்பான பிற கொண்டாட்டங்களில் பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை/ ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக் குறைப்பு போன்ற கருத்துருக்கள் முன் வைக்கப்பட்டதா? இது தொடர்பாக நடத்தப்பட்ட குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள்/நிகழ்வுகள் என்ன? | |
| 15. | Have you formed any student committees to organize discussions on how to make campus plastic free and organize clean-up drives within and outside campus *(e.g., plastic free days in a month, encouraging usage of fountain pens over ball pens etc.)*<br>பிளாஸ்டிக் இல்லாத வளாகமாக மாற்றுவதற்கும், வளாகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தூய்மைப்படுத்தும் இயக்கங்களை ஏற்பாடு செய்வது குறித்த விவாதங்களை ஏற்பாடு செய்ய ஏதேனும் மாணவர் குழுக்களை உருவாக்கியுள்ளீர்களா (எ.கா., ஒரு மாதத்தில் பிளாஸ்டிக் இல்லாத நாட்கள், பால்பாயிண்ட் பேனாக்களுக்கு பதிலாக ஃபவுண்டன் பேனாக்களை பயன்படுத்துவதை ஊக்குவிப்பது போன்றவை) | |
| 16. | Please give the number of cleaning up activities conducted within campus/ in public spaces in the last 1 year (April 2024 to March 2025) and quantity of plastic collected/ disposed in such activities.<br>கடந்த 1 வருடத்தில் (ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 வரை) வளாகத்திற்குள்/ பொது இடங்களில் நடத்தப்பட்ட தூய்மைப் பணிகளின் எண்ணிக்கையையும், அத்தகைய நடவடிக்கைகளில் சேகரிக்கப்பட்ட/ அப்புறப்படுத்தப்பட்ட பிளாஸ்டிக்கின் அளவையும் வழங்கவும். | |
| 17. | What initiatives were undertaken to replace plastic products used in canteen with eco-friendly alternatives *(Give the number of items that are in plastic and number of items in alternatives)*<br>கேண்டீனில் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களுக்குப் பதிலாக சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்த என்னென்ன முயற்சிகள் எடுக்கப்பட்டன? (பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் மாற்றுப் பொருட்களின் எண்ணிக்கையை வழங்கவும்) | |

| | | |
|---|---|---|
| 18. | Are there any specific waste segregation practices followed on the campus with a motive of separate disposal for plastics? (***Please specify the period when these were started) – Please highlight this separately for overall campus and cafeterias/ canteens separately.***<br>பிளாஸ்டிக்கை தனித்தனியாக அகற்றும் நோக்கத்துடன் வளாகத்தில் கழிவுகளைத் தரம் பிரிக்கும் நடைமுறைகள் ஏதேனும் பின்பற்றப்படுகிறதா *(இவை தொடங்கப்பட்ட காலத்தைக் குறிப்பிடவும்) – ஒட்டுமொத்த வளாகம் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள்/ கேன்டீன்களுக்கு தனித்தனியாக இதைக் குறிப்பிடவும்* | |
| 19. | Please give the proportion of plastic waste generated in the total waste on daily basis *(weight of plastic waste generated in a month/ weight of total waste generated in a month)*<br>***Please highlight this separately for overall campus and cafeterias/ canteens separately***<br>*Do you recover any value from the plastic waste generated*<br>தினசரி அடிப்படையில் மொத்தக் கழிவுகளில் உற்பத்தியாகும் பிளாஸ்டிக் கழிவுகளின் விகிதத்தைக் குறிப்பிடவும் *((i) ஒரு மாதத்தில் உருவாகும் பிளாஸ்டிக் கழிவுகளின் எடை/ (ii) ஒரு மாதத்தில் உருவாகும் மொத்தக் கழிவுகளின் எடை) ஒட்டுமொத்த வளாகம் மற்றும் சிற்றுண்டிச்சாலைகள்/ கேன்டீன்களுக்கு தனித்தனியாக இதைக் குறிப்பிடவும்.*<br>*உற்பத்தியாகும் பிளாஸ்டிக் கழிவுகளைப் பணமாகவோ/மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்களாகவோ மாற்றுகிறீர்களா?* | |
| 20. | Please give the plan for disposal of E-Waste generated on the campus and their quantity.<br>வளாகத்தில் உருவாகும் மின்–கழிவுகளை அகற்றுவதற்கான திட்டத்தையும் அவற்றின் அளவையும் வழங்கவும் | |
| 21. | Is there awareness on installation/ availability/ usage of bottle crushers/ Manjappai vending machines in Tamil Nadu?<br>தமிழ்நாட்டில் நிறுவப்பட்டுள்ள பிளாஸ்டிக் பாட்டில் சேகரிக்கும் (நொறுக்கும்) இயந்திரங்கள் / மஞ்சப்பை விற்பனை இயந்திரங்கள் அமைந்துள்ள விவரங்கள் / அவற்றின் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு உள்ளதா? | |
| 22. | Have you installed machineries for safe disposal of sanitary waste in all washrooms in the campus? Are there display boards with clear instruction for use of such machines? (If applicable)<br>வளாகத்தில் உள்ள அனைத்து கழிவறைகளிலும் சுகாதாரக் கழிவுகளை பாதுகாப்பாக அகற்ற இயந்திரங்களை நிறுவியுள்ளீர்களா? அத்தகைய இயந்திரங்களைப் | |

| | | |
|---|---|---|
| | பயன்படுத்துவதற்குத் தெளிவான அறிவுறுத்தலுடன் காட்சிப் பலகைகள் உள்ளதா? (பொருந்தினால்) | |
| 23. | Is there a nodal officer/ faculty led team for waste management/ plastic management on the campus and what trainings are provided to the nodal officer in this regard?<br>வளாகத்தில் கழிவு மேலாண்மை/ பிளாஸ்டிக் மேலாண்மைக்கு நியமிக்கப்பட்ட அலுவலர்/ பேராசிரியர் தலைமையிலான குழு உள்ளதா மற்றும் இது தொடர்பாக நியமிக்கப்பட்ட அலுவலருக்கு என்ன பயிற்சிகள் வழங்கப்படுகின்றன? | |
| *The Institutions shall submit documentary evidence with dated photographs to back up their responses. The application form along with the evidence (documents/ photos/ videos) shall be emailed to the following email ID xxx@xxx.xxx with the subject 'Application for Manjappai Awards- Colleges'. The evidences to be numbered based on the questions for which the same are provided. In case of multiple evidences, the evidences shall be assigned multilevel numbering, for e.g. 1.a, 1.b etc.*<br>*நிறுவனங்கள் தங்கள் பதில்களுக்கான ஆவணச்சான்றுகளை, தேதியிட்ட புகைப்படங்களுடன் சமர்ப்பிக்கவேண்டும். விண்ணப்பப்படிவம், ஆதாரங்களுடன் (ஆவணங்கள்/ புகைப்படங்கள்/ வீடியோக்கள்) xxx@xxx.xxx என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 'மஞ்சப்பை விருதுகளுக்கான விண்ணப்பம் – கல்லூரிகள்'என்ற தலைப்பில் அனுப்பப்பட வேண்டும். எந்தெந்த கேள்விகளுக்கானது என்ற அடிப்படையில் சான்றுகள் எண்ணிடப்பட வேண்டும். பல சான்றுகள் இருந்தால், சான்றுகளுக்குப் பலநிலை எண்கள் ஒதுக்கப்பட வேண்டும், எ.கா. 1.a, 1.b.* | | |

Type of Institution - Commercial Establishment s (*Assessment period - April 2024- March 2025*)
நிறுவனத்தின் வகை – வணிக நிறுவனங்கள் (*மதிப்பீட்டு காலம் ஏப்ரல் 2024 – மார்ச் 2025*)

| FORM- III (COMMERCIAL ESTABLISHMENTS)/ படிவம் – III (வணிக நிறுவனங்கள்) | | |
|---|---|---|
| **S.No.<br>வ. எண்.** | **Questions<br>கேள்விகள்** | **Answer<br>பதில்** |
| ***GENERAL DETAILS<br>பொது விவரங்கள்:*** | | |
| 1. | Name of the Commercial Establishment<br>வணிக நிறுவனத்தின் பெயர் | |
| 2. | Type of Establishment (Malls/ Shopping complexes/ Shops/ Hotels/ Restaurants)<br>நிறுவனத்தின் வகை (வணிக வளாகங்கள்/கடைகள்/ உணவகங்கள்/உணவு விடுதிகள்) | |
| 3. | Address of the Commercial Establishment<br>வணிக நிறுவனத்தின் முகவரி | |
| 4. | Name of the Person to be contacted<br>தொடர்பு கொள்ள வேண்டிய நபரின் பெயர் | 5. Contact number<br>தொலைபேசி எண். |
| | | |
| 6. | Year of Establishment<br>நிறுவப்பட்ட வருடம் | 7. Total strength of the Organization<br>நிறுவனத்தில் உள்ள மொத்த நபர்களின் எண்ணிக்கை |
| | | No. of Employees<br>பணியாளர்களின் எண்ணிக்கை |
| | | |
| *RESPONSES TO AWARD CRITERIA<br>விருது அளவு கோல்களுக்கான பதில்கள்* | | |
| 8. | Please give the number of campaigns undertaken by the Establishment for the prevention of SUPs amongst the public.<br>பொதுமக்களிடையே ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்குகளைத் தடுப்பதற்காக நிறுவனம் மேற்கொண்ட பிரச்சாரங்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடவும். | |
| 9. | Are there any Manjappai vending machines/ bottle crushers installed on campus?<br>வளாகத்தில் ஏதேனும் மஞ்சப்பை விற்பனை இயந்திரங்கள் / பிளாஸ்டிக் பாட்டில் சேகரிக்கும் (நொறுக்கும்) இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளதா? | |

| | | |
|---|---|---|
| 10. | Please list the initiatives undertaken by the management to reduce the use of plastic on a daily basis.<br>தினசரி பிளாஸ்டிக் பயன்பாட்டைக் குறைக்க நிர்வாகம் மேற்கொண்ட முயற்சிகளைப் பட்டியலிடவும். | |
| 11. | Please give the number of awards won by the management for their plastic/ waste management practices/ initiatives.<br>பிளாஸ்டிக்/கழிவு மேலாண்மை நடைமுறைகள்/ முன்முயற்சிகளுக்காக கடந்த இரு ஆண்டுகளில் நிர்வாகம் வென்ற விருதுகளின் எண்ணிக்கையைக் குறிப்பிடவும் (2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில்). | |
| 12. | Are there any innovative measures undertaken by the Institution to reuse plastic/ E-Waste on campus?<br>வளாகத்தில் பிளாஸ்டிக்/ மின் கழிவுகளை மீண்டும் பயன்படுத்த நிறுவனம் ஏதேனும் புதுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா? | |
| 13. | Do you celebrate Environment day, Earth day or any other days related to Environment on the premises every year? Do you provide any offers or conduct any competition event for public in relation to SUP ban or reducing plastics.<br>நீங்கள் ஒவ்வொரு ஆண்டும் சுற்றுச்சூழல்தினம், புவி நாள் அல்லது சுற்றுச்சூழல் தொடர்பான வேறு எந்த நாட்களையும் வளாகத்தில் கொண்டாடுகிறீர்களா? ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக் தடை அல்லது பிளாஸ்டிக்கைக் குறைப்பது தொடர்பாக பொதுமக்களுக்கு ஏதேனும் சலுகைகளை வழங்குகிறீர்களா அல்லது ஏதேனும் போட்டி நிகழ்வை நடத்துகிறீர்களா? | |
| 14. | Please give the number of cleaning up activities led by employees within campus/ in public spaces in the last 1 year (April 2024 to March 2025).<br>கடந்த 1 வருடத்தில் (ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 வரை) வளாகத்திற்குள்/பொது இடங்களில் பணியாளர்கள் நடத்திய தூய்மைப் பணிகளின் எண்ணிக்கையை வழங்கவும். | |
| 15. | Are there any specific waste segregation practices followed within the premises with focus on plastics *(Please specify the period when these were started).*<br>பிளாஸ்டிக்கை மையமாக வைத்து வளாகத்திற்குள் கழிவுகளைத் தரம் பிரிக்கும் நடைமுறைகள் ஏதேனும் பின்பற்றப்படுகிறதா (எனில், இவை தொடங்கப்பட்ட காலத்தைக் குறிப்பிடவும்) | |
| 16. | Please give the proportion of plastic waste generated in the total waste on a monthly basis. Do you resell the plastics recovered for recycling purposes?<br>மொத்தக் கழிவுகளில் உருவாகும் பிளாஸ்டிக் கழிவுகளின் விகிதத்தை மாதாந்திர அடிப்படையில் வழங்கவும் – | |

| | | |
|---|---|---|
| | மறுசுழற்சி நோக்கங்களுக்காக மீட்கப்பட்ட பிளாஸ்டிக்கை மறுவிற்பனை செய்கிறீர்களா? | |
| 17. | Please give the number of display boards (LED/ normal)/ billboards put up regarding the banned SUPs.<br>தடை செய்யப்பட்ட ஒற்றைப் பயன்பாட்டு பிளாஸ்டிக்குகள் தொடர்பாக வைக்கப்பட்டுள்ள காட்சிப் பலகைகள் (LED/ சாதாரண) / விளம்பரப் பலகைகளின் எண்ணிக்கையை வழங்கவும். | |
| 18. | What quantity of E-Waste generated on the premises and do you resell the E-waste recovered for recycling purposes?<br>வளாகத்தில் எவ்வளவு மின்–கழிவுகள் உருவாகின்றன மற்றும் மறுசுழற்சி நோக்கங்களுக்காக மீட்கப்பட்ட மின்–கழிவுகளை மறுவிற்பனை செய்கிறீர்களா? | |
| 19. | What are the methods adopted to dispose sanitary waste within the campus/ Establishment to dispose – *any specific machinery used for the same*(If applicable)<br>வளாகத்திற்குள் சுகாதாரக் கழிவுகளை அப்புறப்படுத்த பின்பற்றப்படும் முறைகள்/ அகற்றும் முறை – அதற்கென பயன்படுத்தப்படும் குறிப்பிட்ட இயந்திரங்கள் (பொருந்தினால்) | |
| 20. | What initiatives were taken to replace plastic products used in cafeterias/food courts **and plastic packaging materials** with eco-friendly alternatives? *(Give the number of items that are in plastic and number of items in alternatives)*<br>சிற்றுண்டிச் சாலைகள்/ உணவு விடுதிகளில் பயன்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் பிளாஸ்டிக் பொட்டலங்களுக்குப் பதிலாக சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றீடுகளை வழங்க என்ன முயற்சிகள் எடுக்கப்பட்டன? (பிளாஸ்டிக் பொருட்கள் மற்றும் மாற்றுப் பொருட்களின் எண்ணிக்கையையும் வழங்கவும்) | |
| 21. | Please give the details of awareness conducted to promote shops to adopt more sustainable packaging options using paper, cloth, compostable plastic etc.<br>காகிதம், துணி, மக்கும் பிளாஸ்டிக் போன்றவற்றைப் பயன்படுத்தி மேலும் நிலையான பொட்டலம் கட்டும் முறைகளைக் கடைப்பிடிக்க கடைகளை ஊக்குவிக்க நடத்தப்பட்ட விழிப்புணர்வு விவரங்களை வழங்கவும். | |
| *The Institutions shall submit documentary evidence with dated photographs to back up their responses. The application form along with the evidence (documents/ photos/ videos) shall be emailed to the following email ID xxx@xxx.xxx with the subject 'Application for Manjappai Awards- Commercial Establishment s'. The evidences to be numbered based on the questions for which the same are provided. In case of multiple evidences, the evidences shall be assigned multilevel numbering, for e.g. 1.a, 1.b etc.*<br>*நிறுவனங்கள் தங்கள் பதில்களுக்கான ஆவணச் சான்றுகளை, தேதியிட்ட புகைப்படங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பப் படிவம், ஆதாரங்களுடன்* | | |

*(ஆவணங்கள்/ புகைப்படங்கள்/ வீடியோக்கள்) [xxx@xxx.xxx](mailto:xxx@xxx.xxx) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 'மஞ்சப்பை விருதுகளுக்கான விண்ணப்பம்– வணிக நிறுவனங்கள்' என்ற தலைப்பில் அனுப்பப்பட வேண்டும். எந்தெந்த கேள்விகளுக்கானது என்ற அடிப்படையில் சான்றுகள் எண்ணிடப்பட வேண்டும். பல சான்றுகள் இருந்தால், சான்றுகளுக்குப் பலநிலை எண்கள் ஒதுக்கப்பட வேண்டும், எ.கா. 1.a, 1.b.*